www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

2SR

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :-** 15 X 1 = 15

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது -
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது .............. .
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

6. மேன்மை தரும் அறம் என்பது ........... .
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

7. 'கேட்டவர் மகிழப்பாடிய பாடல் இது' - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

8. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

9. 'கேட்க வேண்டிய பாடல்' - என்பது
அ) எழுவாய்த்தொடர் ஆ) கூட்டுநிலைப் பெயரெச்சம் இ) உரிச்சொல் தொடர் ஈ) வேற்றுமை

10. துரை மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்டவர்?
அ) பாரதிதாசன் ஆ) கு.பா.ரா. இ) பெருஞ்சித்திரனார் ஈ) பாவாணர்

11. 'எனது போராட்டம்' என்னும் தன்வரலாற்று நூலை எழுதியவர்?
அ) பாரதியார் ஆ) ம.பொ. சிவஞானம் இ) கு. அழகிரிசாமி ஈ) ராஜம் கிருஷ்ணன்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி :-***

*'விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும் ;*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்'*

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம் இ) பரிபாடல் ஈ) கொய்யாக்கனி

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) குலசேகராழ்வார் ஆ) கீரந்தையார் இ) குமரகுருபரர் ஈ) இளங்கோவடிகள்

14. 'ஊழ் ஊழ்' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை

15. விசும்பு என்ற சொல்லின் பொருள் ................. .
அ) பூமி ஆ) வானம் இ) நிலவு ஈ) எல்

பகுதி - II பிரிவு - 1

II **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா 21-ற்குக் கட்டாயமாக விடையளிக்கவும் :-** 4 X 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது.
ஆ) தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர்.

17. வசன கவிதை - குறிப்பு வரைக.

18. 'நச்சப்படாதவன்' செல்வம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

19. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

20. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

21. 'தரும்' என முடியும் குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க :-** 5 X 2 = 10

22. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

23. *இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
அ) மலை - மாலை ஆ) தொடு - தோடு

24. *எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.*
அ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
ஆ) எறும்புந்தன் கையால் எண்சாண்

25. "தம்பீ, எங்க நிக்கிறே"?, "நீங்க சொன்ன எடத்துல தாண்ணே!, எதிர்த்தாப்புல ஒரு டீஸ்டால் இருக்குது" *- இவ்வுரையாடலில் உள்ள பேச்சுவழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.*

26. *கலைச்சொற்கள் தருக.* அ) Myth ஆ) Belief
***(குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்றுவினா)*** *(பூவில், எழுத்து, கரு)*
அ) குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து ................ .
ஆ) மீன் இருப்பது நீரில் : தேன் இருப்பது .............. .

27. ***பகுபத உறுப்பிலக்கணம் தருக.*** 'உரைத்த'

28. ***உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.***
மழைமுகம் காணாப் பயிர்போல.

பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டிற்கு விடையளி :-** 2 X 3 = 6

29. **பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**
சீன நாட்டில் 'காண்டன்' நகருக்கு 500கல் வடக்கே சூவன்சௌ என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர். அதன் காரணமாக சீனாவில் சிவன் கோவில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அது சீனப் பேரரசரான 'குப்லாய்கானின்' ஆணையின் கீழ் கட்டப்பட்டது



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

என்பதனைக் குறிக்கும் தமிழ்க் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது. இக்கோயிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அ) காண்டன் நகர் எங்கு உள்ளது?

ஆ) சீனாவில் கட்டப்பட்டுள்ள சிவன் கோவில் யாருடைய ஆணையின் கீழ் கட்டப்பட்டது?

இ) சிவன் கோயிலில் எந்த அரசர் காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

31. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு :-** 2 X 3 = 6

32. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

33. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34. வாளால் ........ எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப்பாடலை அடிபிறழாமல் எழுதுக. ***(அல்லது)*** தூசும் எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்கவும் :-** 2 X 3 = 6

35. தோட்டத்தில் மல்லிகைப் பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
-இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

36. வினா எத்தனை வகைப்படும்? அவற்றை உதாரணத்துடன் விளக்கி எழுதுக.

37. தீவக அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :-** 5 X 5 = 25

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்தரனாரின் தமிழ்வாழ்த்தையும் ஒப்பிட்டு எழுதுக. ***(அல்லது)***

ஆ) இரண்டாம் இராசராச சோழன் - மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற தோழனை வாழ்த்தி மடல் ஒன்று எழுதுக. ***(அல்லது)***

ஆ) பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "மரம் நடு விழாவுக்கு" வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் "பசுமைப் பாதுகாப்பு படை" சார்பாக நன்றியுரை எழுதுக.

40. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.
பாடநூல் - ப.எண். 181



41. 4/45 பூங்கா நகர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்துவரும் கருப்பையாவின் மகள் இனியா நூலகத்தில் உறுப்பினராகச் சேர உள்ளார். தேர்வர் தன்னை இனியாவாகப் பாவித்து உரிய படிவத்தில் நிரப்புக.

42. **அ) மொழிபெயர்க்க.**

*Wondering at the cute music*
*Coming from the chamber*
*Entered I to to look up to in still*
*My grand - daughter*
*Learning by rote the verses*
*Of a didactic compilation* ***(அல்லது)***



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**ஆ) வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
2. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார் அவரை அழைத்து வாருங்கள்.
3. நேற்று என்னைச் சந்தித்தார் அவர் என் நண்பர்.
4. பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார் போட்டித் தேர்வில் வென்றார்.

***(குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்றுவினா)***

**அ) பத்தியைப் படித்துப் பதில் தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப்பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

***வினாக்கள் :-***

1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :-** 3 X 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. ***(அல்லது)***

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க. ***(அல்லது)***

ஆ) குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் நாடகம் எழுதுக. மாணவன் - கொக்கைப்போல, கோழியைப்போல - உப்பைப்போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் மாணவன் மகிழ்ச்சி.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. ***(அல்லது)***

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**பத்தாம் வகுப்பு திருப்புதல் தேர்வு - 2 சேலம் – 2023**
**தமிழ் விடைக்குறிப்பு**

**பகுதி -I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **15X1=15**

| | | |
|---|---|---|
| **1.** | அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும் | **1** |
| **2.** | இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு | **1** |
| **3.** | ஈ) வானத்தையும் பேரொலியையும் | **1** |
| **4.** | அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. | **1** |
| **5.** | ஈ) சிலப்பதிகாரம் | **1** |
| **6.** | அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது | **1** |
| **7.** | ஈ) பாடல்;கேட்டவர் | **1** |
| **8.** | இ) உருவகம் | **1** |
| **9.** | ஆ) கூட்டுநிலைப் பெயரெச்சம் | **1** |
| **10.** | இ) பெருஞ்சித்திரனார் | **1** |
| **11.** | ஆ) ம.பொ.சிவஞானம் | **1** |
| | **பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க** | |
| **12.** | இ) பரிபாடல் | **1** |
| **13.** | ஆ) கீரந்தையார் | **1** |
| **14.** | அ) அடுக்குத்தொடர் | **1** |
| **15.** | ஆ) வானம் | **1** |

**பகுதி –II பிரிவு – 1 –**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (மதிப்பெண்கள்- 18) 4X2=8**
**வினா எண் 21ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்**

| | | |
|---|---|---|
| 16. | **விடைக்கேற்ற வினா**<br>அ) **யாருடைய** இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது?<br>ஆ) போரிலும் அறநெறியைப் பின்பற்றியவர் **யார்?**<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 1<br>1 |
| 17. | **வசன கவிதை**<br>❖ உரைநடையும் கவிதையும் இணைந்து **யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு** உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.<br>❖ ஆங்கிலத்தில் Prose Poetry ( free verse ) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. | 1<br>1 |
| 18. | **நச்சப்படாதவன்**<br>❖ பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர். | 2 |
| 19. | **சிலப்பதிகாரம் காட்டும் வணிகர்கள்**<br>பாசவர் - வெற்றிலை விற்பவர்<br>வாசவர் - நறுமணப் பொருள்கள் விற்பவர்<br>பல்நிண விலைஞர் - பலவகையான இறைச்சி விற்பவர்<br>உமணர் - உப்பு விற்பவர் | ½<br>½<br>½<br>½ |
| 20. | **விடை**<br>❖ விடை எட்டு வகைப்படும்.<br>❖ சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை. | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 21. | **திருக்குறள்**<br>அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்<br>பெருமை முயற்சி தரும். | 2 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி 4X2=8** | |
| 22. | **புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகள்**<br>1) வெட்சி X கரந்தை 2) வஞ்சி X காஞ்சி<br>3) நொச்சி X உழிஞை 4) தும்பை X வாகை<br>5) பாடாண் X பொதுவியல் 6) கைக்கிளை X பெருந்திணை | ½<br>½<br>1 |
| 23. | **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைக்க**<br>அ) **மலைக்** கோவிலுக்கு **மாலையில்** செல்வேன்.<br>ஆ) பூக்களால் **தொடுத்த தோடுகளை** அணிந்து கொண்டேன்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 1<br>1 |
| 24. | **எண்ணுப் பெயர்கள்**<br>அ) நான்கு, இரண்டு – ச, உ<br>ஆ) எட்டு – அ | 1<br>1 |
| 25. | **பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக**<br>"**தம்பி**? எங்கே **நிற்கின்றாய்**?"<br>"**நீங்கள்** சொன்ன **இடத்திலேதான் அண்ணா**! ஏதிர்ப் **பக்கத்தில் தேநீர்க்கடை இருக்கன்றது.**" | 1<br>1 |
| 26. | **கலைச்சொல்** அ) தொன்மம்<br>ஆ) நம்பிக்கை<br>**(செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா)**<br>அ) எழுத்து<br>ஆ) பூவில் | 1<br>1<br><br>1<br>1 |
| 27. | **பகுபத உறுப்பிலக்கணம் - உரைத்த**<br>**உரை+த்+த்+அ**<br>உரை – பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை,<br>அ – பெயரெச்ச விகுதி | 1<br>1 |
| 28. | **உவமையை சொற்றொடரில் பொருத்துக**<br>தாயைக் காணாத குழந்தையின் **முகம் மழை முகம் காணாப் பயிர் போல** வாடியது.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 2 |
| | **பகுதி –III பிரிவு – 1**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2X3=6** | |
| 29. | **பத்தியைப் படித்து விடையளிக்க**<br>அ) சீனா<br>ஆ) குப்லாய்கான்<br>இ) சேரர் | 1<br>1<br>1 |
| 30. | **இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றவா**<br>❖ பொது அறிவு மேம்பட்டுள்ளது.<br>❖ மொழியைக் கற்பிக்கவும், மக்கள் மகிழ்ச்சியாக பொழுது போக்கவும்.<br>❖ உடனுக்குடன் செய்திகளைத் தெரிந்து கொள்ள உதவுகிறது.<br>❖ மனித உழைப்பையும், நேரத்தையும் மிச்சப்படுத்தி, சராசரி ஆயுளைக் கூட்டுகிறது.<br>❖ முனிதன் செய்ய முடியாத ஆக்கப்பூர்வமான பணிகளை அறிவியல் கண்டுபிடிப்புகள் செய்து முடிக்கிறது.<br>(ஏற்புடைய கருத்திற்கு முழு மதிப்பெண் வழங்குக) | 1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 31. | **சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே:**<br>**1.அறத்தில் வணிகம் கூடாது:**<br>எதிர்பார்ப்போடு பிறருக்கு உதவக்கூடாது. கைமாறு கருதாத உதவியே அறம்.<br>இது இன்றைய காலத்தேவை.<br>**2. கொடை:**<br>செல்வத்துப் பயனே ஈதல் என்கிறது சங்க இலக்கியம்.<br>இன்று பிறர்க்கு ஈகைக் குணம் குறைந்துவிட்டது. இது அதிகரிக்க வேண்டும்.<br>**3.பொய்யாச் செந்தா** – என்பது சங்க இலக்கியச் சூழலுக்கு ஏற்ப மனிதன் மாறுகிறான். பொய்யர்கள் மிகுந்துவிட்டனர். எனவே நற்றிணை கூறும் பிழையா நன்மொழியை நாம் கடைபிடிக்க வேண்டும். | 1<br><br>1<br><br>1 |

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **2X3=6**

| | | |
|---|---|---|
| 32. | **வள்ளுவம் சிறந்த அமைச்சருக்கு கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துகிறது:**<br>• சிறந்த அமைச்சருக்குக் கருவி, காலம், வலிமை, குடிகாத்தல், ஆட்சிமுறை, நூலறிவு, விடாமுயற்சி ஆகியவை வேண்டும். இவற்றைப் பெற்றால் வாழ்வில் வெற்றி பெறலாம்.<br>• .நூலறிவோடு உலகியல் அறிவும் அமைச்சர்களுக்கு வேண்டும் என்கின்றார் வள்ளுவர்.<br>நாமும் இவை இரண்டையும் பெற்றால்தான் சிறப்பாக வாழமுடியும். | 1<br>½<br>1<br>½ |
| 33. | **மாளாத காதல் நோயாளன் போல்**<br>**உவமை : நோயாளன் போல்**<br>**உவம உருபு : போல்**<br>❖ மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.<br>❖ அது போன்று வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அம்மனே!<br>❖ நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன் என்று குலசேகரர் தன் மனநிலையை வெளிப்படுத்துகிறார். | ½<br>1<br>1<br>½ |
| 34. | **பெருமாள் திருமொழி**<br>வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்<br>மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்<br>மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம் மாநீ<br>ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே<br>**- குலசேகர ஆழ்வார்** | 3 |
| | **அல்லது** | |
| | **சிலப்பதிகாரம்.**<br>தூசும் துகிரும் ஆரமும் அகிலும்<br>மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்<br>அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா<br>வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்<br>பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு<br>கூலம் குவித்த கூல வீதியும்<br>**- இளங்கோவடிகள்** | 3 |

| பிரிவு – 3<br>எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி | | 2X3=6 |
|---|---|---|
| 35. | **தொகைநிலைத்தொடர் வகைகள்**<br>மல்லிகைப்பூ - இருபெயரொட்டு பண்புத்தொகை<br>பூங்கொடி - உவமைத்தொகை<br>ஆடு மாடு - உம்மைத்தொகை<br>தண்ணீர்தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை<br>குடிநீர் - வினைத்தொகை<br>சுவர்க்கடிகாரம் - ஏழாம் வேற்றுமைத்தொகை<br>மணி பார்த்தாள் - இரண்டாம் வேற்றுமைத்தொகை | 1<br>1<br>1 |
| 36. | **வினா வகைகள்**<br>• ஆறு வகைப்படும்<br>• **அறிவினா**<br>தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்கு தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவும் வினா அறிவினா.<br>(எ.கா) மாணவரிடம், ' இந்தக் கவிதையின் பொருள் யாது,' என்று ஆசிரியர் கேட்பது.<br>• **அறியா வினா**<br>தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவும் வினா அறியா வினா.<br>(எ.கா) ஆசிரியரிடம், ' இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்டல்.<br>• **ஐய வினா**<br>ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காக கேட்கப்படும் வினா ஐய வினா.<br>(எ.கா) "இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா? என வினவுதல்.<br>• **கொளல் வினா**<br>தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவும் வினா கொளல் வினா.<br>(எ.கா) அரிசி என்ன விலை? எனக் கடைக்காரரிடம் வினவுவது.<br>• **கொடை வினா**<br>பிறருக்கு ஒரு பொருளை கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது கொடை வினா.<br>(எ.கா) தம்பி, எழுதுகோல் வேண்டுமா? என வினவுவது.<br>• **ஏவல் வினா**<br>ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது ஏவல் வினா.<br>(எ.கா) "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா?" என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல். | 1<br>1<br>1 |

**ஜெமி வினா வங்கி - தமிழ்**

| | | |
|---|---|---|
| 35. | **தீவக அணி**<br>**அணி விளக்கம் :** தீவகம் என்னம் சொல்லுக்க **'விளக்கு'** என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்படும்.<br>**எ.கா:** சேந்தன வேந்தன் நெடுங்கண்...<br>**அணிப்பொருத்தம் :** முதலில் நிற்கும் 'சேந்தன' (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது. ஆதனால் இது தீவக அணி ஆயிற்று. | 1<br>1<br>1 |

## பகுதி -IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **5X2=25**

38 அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு ஒரு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

| சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து | பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து |
|---|---|
| சீர் இளமைத் திறன் | மண்ணுலகப் பேரரசி |
| முகம் பாரதக் கண்டம் | திருக்குறளின் மாண்புகழ் |
| நெற்றிப் பொட்டு தமிழகம் | எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு |
| எட்டுத்திசைகளிலும் புகழ் | சிலம்பையும் மணிமேகலையையும் அணிந்துள்ள தமிழ்த்தாயை வாழ்த்துதல் |
| தமிழைத் தமிழ்த்தாயாக வாழ்த்துதல் | |

(மதிப்பெண்: 1, 1, 1, 1, 1)

**அல்லது**

ஆ **மெய்க்கீர்த்தி பாடலின் நயம்**

- ❖ இரண்டாம் இராசராசசோழனின் நாட்டின் வளம், ஆட்சிச் சிறப்பைச் சொல்கின்றது. 1
- ❖ சோழநாட்டில் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை. 1
- ❖ வெறுமை இல்லை.
- ❖ நெற்கதிர்கள் மட்டுமே போராக உள்ளன. வேறு போர்கள் இல்லை. 1 1
- ❖ வறுமை இருள் இல்லை. சிறப்பான சொற்கள் இடம்பெற்றுள்ளன. 1
- ❖ இரட்டுற மொழிதலணி இடம்பெற்றுள்ளது

**(துணைத்தலைப்புகளுடன் பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக)**

**ஜெமி வினா**
**வங்கி - தமிழ்**

| | | |
|---|---|---|
| 39. அ | **அ) 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற தோழனை வாழ்த்தி மடல்:**<br>➢ இடம், நாள் (வலப்புறம்)<br>➢ விளித்தொடர்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ உறைமேல் முகவரி | 5 |
| | **அல்லது** | |
| ஆ) | **நன்றியுரை**<br>**அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி கலந்த வணக்கம்!**<br>நன்றி நவிலல் என்பது நம்முடன் பிறந்தது. அவ்வழியே, எத்தனையோ நற்பணிகள் இருந்தும் நேரமின்மையைச் சுட்டிக்காட்டாமல் இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள சிறப்பு விருந்தினர் அவர்களுக்க என் உளமார்ந்த நன்றியை நவில்கிறேன். இம்மரம் நடுவிழா நடைபெறுவதற்கு எங்களை வழிநடத்திய பள்ளி முதல்வருக்குப் பள்ளியின் 'பசுமைப் பாதுகாப்பு படை' சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக)** | 5 |
| 40 | **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**<br>(பொருத்தமான தலைப்பு எழுதி, கவிதை வடிவில் எட்டு வரிகளுக்கு குறைவில்லாமல் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) | 5 |
| 41. | **நூலக உறுப்பினர் படிவம்**<br>உரிய விபரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு முழு மதிப்பெண் வழங்குக. | 5 |
| 42. அ | **மொழிபெயர்க்க :**<br>அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப் பார்த்தேன்<br>பேத்தி,<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>**(பொருத்தமான ஐந்து கருத்துகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக)** | 5 |
| | **அல்லது** | |
| ஆ | **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றுக**<br>1. ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.<br>2. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.<br>3. நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.<br>4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார். | 5 |
| | **குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா** | |
| | 1. மீண்டும் மீண்டும் | 1 |
| | 2. தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. | 1 |
| | 3. பெய்மழை | 1 |
| | 4. பெரு வெடிப்பு கோட்பாடு | 1 |
| | 5. மழை, காற்று, மரம், செடி, கொடி, நெருப்பு, நீர், விலங்கினம் | 1 |

**ஜெமி வினா வங்கி – தமிழ்**

| பகுதி -V<br>அனைத்து வினாக்களுக்கும் விடையளி 3X8=24 | | |
|---|---|---|
| 43.<br>அ) | **தமிழரின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கதிற்கான தேவை குறித்தும், தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு**<br>➢ தமிழின் சிறப்புகள்<br>➢ தமிழ்ச்சொல்வளம்<br>➢ புதிய சொல்லாக்கத்திற்கான தேவை<br>**( பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக )** | 8 |
| | **அல்லது** | |
| ஆ) | ♣ இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள்<br>♣ நம் நாட்டின் தேசிய விழாக்கள் மிகவும் இன்றியமையாதன. நாட்டு விழாக்கள்<br>♣ குடியரசுதினம், சுதந்திரதினம், தியாகிகள்தினம் போன்றவை நாட்டு விழாக்கள். விடுதலைப் போராட்ட வரலாறு<br>♣ இந்திய நாட்டின் விடுதலைப்போராட்ட வரலாறு நீண்ட வரலாறு கொண்டதாகும்.<br>♣ பல போராட்ட வீரர்களின் இறப்பிலும், வலியிலும், தியாகத்திலும் எழுதப்பட்டது நம் விடுதலைப் போராட்ட வரலாறு.<br>♣ விடுதலைப் போராட்ட வீரர்கள் பல இன்னல்களைத் தாண்டி சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தனர். மாணவர் பங்கு<br>♣ விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவாக நடைபெறும் விழாவில் மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டும்.<br>♣ மாணவர்கள் நாட்டு முன்னேற்றத்தில் பங்குகொள்ள வேண்டும். நாட்டக்குத் தொண்டாற்றும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.<br>நாட்டுநலப்பணி: மாணவர்கள் அனைவரும் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணி மற்றும் பொதுசேவைத் திட்டங்களில் சேர்ந்து பங்காற்ற வேண்டும். | 8 |
| 44.<br>அ) | **கோபல்லபுரத்து மக்கள்**<br>♣ வாடுவோரைக் கண்டால் உதவிக்கரம் நீட்டும் கருணை உள்ளம் உடையவர் அன்னமய்யா<br>♣ பார்ப்பதற்கு முதியவர் போன்ற தோற்றம் உடைய ஒருவர் வருவதைப் பார்த்தார்.<br>♣ உக்காருங்க உக்காந்து குடிங்க என்று விருந்தினரை உபசரிப்பதோடு அருகிலிருந்து உணவு பரிமாறியவிதம் பாராட்டத்தக்கது.<br>♣ வந்தவன் மன நிறைவோடு நீத்து பாகத்தைக் குடித்தவுடன் அன்னமய்யாவுக்கு ஒரு நிறைவு ஏற்பட்டது.<br>♣ "அன்னமய்யா" என்று கூறியதும் பெயர் எவ்வளவு பொருத்தம் என உணர்ந்தான்.<br>♣ அன்னம் என்றால் உணவு அன்னமய்யாவின் எண்ணமும் அன்னமிடுவது தான் என நினைத்தான<br>♣ உணவளித்து மகிழ்ந்த அன்னமய்யாவின் குணம் நம்மிடமும் மலர வேண்டும்.<br>**(துணைத்தலைப்புகளுடன் பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக)** | 8 |

| | **அல்லது** | |
|---|---|---|
| ஆ) | **நாடகம்**<br>மாணவர் - கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப்போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி<br>**(துணைத்தலைப்புகளுடன் பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக)** | 8 |
| 45 அ) | **<u>அரசுப் பொருட்காட்சி</u>**<br>➢ முன்னுரை<br>➢ நுழைவுச்சீட்டு<br>➢ பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள்<br>➢ அங்காடிகள்<br>➢ பிற பொழுதுபோக்கு அம்சங்கள்<br>➢ முடிவுரை<br>**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | 8 |
| | **அல்லது** | |
| ஆ) | **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**<br>➢ முன்னுரை<br>➢ இயற்கையோடு இயைந்து வாழ்வோம்<br>➢ வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம்<br>➢ மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம்<br>➢ முடிவுரை<br>**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | 8 |

**சுந்தரராஜன் மா**
**B.Lit., M.A., B.Ed., D.T.Ed**
9566585860
ஸ்ரீராம் வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,
பொட்டனேரி, சேலம் - 636453.

**ஜெமி வினா வங்கி - தமிழ்**